[1970 நவம்பர் 26

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பம்பாயிலிருந்து இது போன்று விசைத்தறிகளை வாங்குகின்ற முயற்சி இருக்கிறது. நம்முடைய மாநிலத்திலுள்ள சிறு தொழில் வாரியமே இதைச் செய்து கொடுக்கலாம் என்று ஒரு முயற்சியை இப்பொழுது பரிசீலித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதில் அவர்கள் வெற்றி பெறுவார்கள். இந்தக் கஷ்டம் இல்லாமல் போய்விடும்.

கல்லணை—காவிரிப்பூம்பட்டினம் சாலை.

***12 வினா—திரு. என் கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் நகரில், மாப்படுகை பகுதியிலுள்ள கல்லணை-காவிரிப்பூம்பட்டினம் சாலையை அரசின் நெடுஞ்சாலைப் பிரிவு எப்போது மேற்கொண்டது ?

(இ) மேற்கண்ட சாலை வேலை எப்போது முடிவுறும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) மாயூரம் நகராட்சிப் பகுதிக்குள் அமைந்துள்ள கல்லணை-காவிரிப்பூம் பட்டினச் சாலையில் 61/2 மைல் முதல் 62/5 மைல் வரையுள்ள சாலையையும் அத்துடன் 590 அடி நீளமுள்ள சாலையையும் அரசு 1968–69-ல் மேற்கொண்டது.

(இ) மேற்குறிப்பிட்ட சாலைக்குச் சிவப்புச் சரளைக்கல் பரப்பித் தனிப்பட்ட முறையில் செப்பனிடும் பணி ஏற்கெனவே முடிவடைந்துள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மேற்கண்ட சாலைக்கு அரசு ஒதுக்கியுள்ள தொகையை அறிவிக்க இயலுமா? அது போலவே, கல்லணை—காவிரிப்பூம்பட்டினம் சாலையில் இன்னும் நெடுஞ்சாலைப் பிரிவில் சேர்த்துக்கொள்ளப்படாத பகுதிகள் விரைவில் நெடுஞ்சாலைப் பிரிவில் சேர்த்துக்கொள்ளப்பட ஆவன செய்ய அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்பொழுது மேற்படி சாலைக்கு ரூ. 24,500 செலவிடப்பட்டிருக்கிறது. மற்றுமுள்ள சாலைகள் கொள்கை அடிப்படையில் ஆண்டுதோறும் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.

தென்பாரை கிராமத்துக்கு வடிகால் திட்டம்.

***13 வினா.—திரு. ஆ. கு. சுப்பையா :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா தென்பரை கிராமத்திற்கு வடிகால் திட்டம் தயாரிக்கப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டதா ?

(இ) அதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

1970 நவம்பர் 26]

(உ) அந்தத் திட்டத்தின் மூலம் பலன் பெறும் நிலங்கள் எத்தனை ஏக்கர்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) மதிப்பீட்டின் தொகை ரூபாய் 5.11 லட்சம்.

(உ) இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் 3,024.74 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும்.

திரு. ஆ. கு. சுப்பையா : ஐயா, நீண்ட நாட்களாக இந்தக் கோரிக்கையை விவசாயிகள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டம் எந்த ஆண்டில் தயாரிக்கப்பட்டது? அதற்கு எப்பொழுது அரசாங்கம் அனுமதி வழங்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எந்த ஆண்டு தயாரிக்கப்பட்டது என்பதற்கு விவரம் இல்லை. 30—9—1970-ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 1979-ல் இந்தத் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்கொண்டு வேலைகள் ஆரம்பிக்கப் படும்.

Articulated buses in Madras.

* 14 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: THIRU K. SAHADEVA KANDER: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether articulated buses are operated in Madras City; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இணைக்கப்பட்ட இரட்டை மாடிப் பேருந்து ஒன்றைச் சோதனை அடிப்படையில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத்துறை சென்னை மாநகரில் ஓட விட்டுள்ளது.

(இ) இப் பேருந்து 100 இருக்கைகளைக் கொண்டுள்ளது. இது பாரிமுனை–கிண்டி தொழிற்பேட்டை வழித்தடத்தில் ஓடுகிறது.

திரு. கே. சகாதேவக் கண்டர் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இணைப்புப் பேருந்துகளின் மூலம் சர்க்காருக்கு லாபம் கிடைக்குமா? அப்படி கிடைக்கும் என்றால், இதை இன்னும் விஸ்தரிப்பு செய்வதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யுமா? இந்த இணைப்புப் பேருந்துகளின் மூலம் இப்பொழுது ஏற்பட்டுள்ள சௌகரியங்கள் என்ன, நன்மைகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சர்க்காருக்கு ஆதாயம் ஏற்படவேண்டுமென்றுதான் விரும்புகிறோம். நாள் ஒன்றுக்கு ரூ. 250 முதல் ரூ. 400 வரையில் இந்த வழித்தடத்தில் வசூல் ஆகிறது. இந்த வழித் தடத்தை ஓட்டுகின்ற காரணத்தினால் ஜன நெரிசல் தவிர்க்கப்படுகிறது.